உ

உரும்பிராய்

# கருணாகரப்பிள்ளையார் கோயில்



# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

## சிறப்பு மலர் - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் காட்வெயர்

இல.54, பலாலி வீதி, உரும்பிராய்.

சீமேந்து வகைகள்

கொங்கிறீட் கற்கள்

கருங்கல்

சீற் வகைகள்

மற்றும் கட்டட சம்பந்த நாணாவித பொருட்கள்

குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள

நாடவேண்டிய இடம்

# AMBAL HARDWARE

54, PALALY ROAD, URUMPIRAI

T.P: 021 2229258


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# உரும்பிராய்
# கருணாகரப்பிள்ளையார் கோயில்



# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

## சிறப்பு மலர் - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

User 1/news/Ratnam/Urumugams.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணாகரப் பிள்ளையாரின் மூலஸ்தானத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமான் வாக்கு. எங்குமாய இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையால் உருவத்திருமேனி தாங்கி எழுந்தருளி இருக்கும் இடமே ஆலயம். ஆகவே ஆலய வழிபாடு மிகவும் முக்கியம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் உலக அன்னையாகிய ஔவைப்பிராட்டியார்.

மேலும் இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றார். ஆதலால் இறைவனை ஆலயத்தில் சென்று தான் வணங்க வேண்டுமா? இருந்த இடத்தில் இருந்தே வணங்கினால் போதாதா? என்று கூறு வாருமுளர்.

இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் ஆலயத்திலுள்ள திருவுருவத்தில் தெளிவாகத்தான் தோன்றுகின்றார். பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்து இருக்கின்றது. பாலைப் பெற முயலுகின்ற ஒருவன் அதன் கொம்பையோ செவிகளையோ, வாலையோ வருடினால் பால் கிடைக்கப்போவதில்லை எனவே, பால் பெற விரும்புவோன் பசுவின் மடியை வருடியே பாலைப் பெற வேண்டும். இறைவன் அருளை பெற விரும்புவோன் ஆலயத்துக்கு சென்று இறைவன் திருவருளைப் பெற வேண்டும்.

இன்றும் கம்பிகளில் மறைந்து நிற்கும் மின்சார விளக்கின் பயனைப் பெற வேண்டுமாயின் அதற்கு உரித்தான ஆளியைத் தட்டும் போதே அது வெளிப்படும் அல்லாதே எங்கும் மறைந்திருக்கின்ற இறைவன் திருவருளைத் திருக்கோயிலின் திருவுருவங்களை வழிபடுவதன் மூலமே பெற வேண்டும்.

ஆலயங்களில் இடம்பெறும் விழாக்கள் அவற்றின் சிறப்பு நோக்கி "மஹோற்சவம்" என்று சொல்லப்படுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பங்ச கிருத்திய உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. அவ் விழாக்களில் இரதோற்சவம் அழித்தல் தொழிலை சுட்டி நிற்கின்றது.

இத்துணை சிறப்பு மிக்க தேர்த்திருவிழாவின் போது உரும்பிராய் கருணாகரப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேரை உருவாக்க திருப்பணிச்சபையினர் ஆரம்ப வேலையை 2005.02.12 இல் தொடங்கினர். இத்திருப்பணிச்சபையின் முன்னாள் செயலாளர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் மலேசியா வாழ் மார்க்கண்டு செல்லத்துரை அவர்களை அணுகி இது பற்றிக் கூறிய போது அவர் இத்திருப்பணியை ஆரம்பிக்க முதலில் தமது அன்பளிப்பு வழங்கினார். அதனைத் தொடர்ந்து கருணாகரப் பிள்ளையார் நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினார். அராலியூர் கலாபூசணம் ஸ்தபதி சி. அமரசிங்கம் புதிய சித்திரத்தேரை அழகுற அமைக்கும் பணியை எற்றார். நாட்டுச் சூழ்நிலைகள் ஆசிரிய மணியின் மறைவு, திரு. செல்லத்துரையின் மறைவு, இப்பணியை நிறைவு செய்வதில் தாமதத்தை ஏற்படுத்தியது.

கருணாகரப் பெருமானின் அழகிய சித்திரத் தேர் வேலையை எவ்வாறு நிறைவேற்றுவது என்று திருப்பணிச்சபைச் செயலாளர் ஏனைய உறுப்பினர்கள் பெரு முயற்சி எடுத்தனர். மலாயன் மார்க்கண்டு செல்லத்துரையின் மகள் அனுசியா மற்றும் வெளி நாடு உள்நாடுகளில் வசிக்கும் கருணாகர அடியார்கள் நிதியை வாரி வழங்கினர். அதன் பேறாக சுந்தர வடிவான அழகிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெற கருணாகரப் பெருமானின் திருவருள் கைகூடியது.

வெள்ளோட்டத்தை முன்னிட்டு அதன் நினைவாக சிறிய அளவிலேனும் வெள்ளோட்ட மலர் ஒன்றை வெளியிட வேண்டும் என திருப்பணிச்சபை விரும்பியது அவ்விருப்பத்தை நிறைவு செய்ய விளம்பரதாரர்களும் ஆக்கங்களை அறிஞர்களும், ஆசிச் செய்திகளை தேவஸ்தான முதல்வர் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களும், ஸ்தபதியும் வழங்கியிருந்தார்கள் இவற்றையெல்லாம் அழகுற ஒழுங்குபடுத்தி புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டத்தின் போது மலர் வெளிவர மதி அச்சகத்தினர் உதவினர். இவ்அனைத்துத் தரப்பினருக்கும் திருப்பணிச் சபையின் சார்பில் பாராட்டுக்கள்.

மேலும் இம்மலரில் பிள்ளையார் சுழி தொடர்பாக ஒரு கட்டுரை கருணாகரப் பிள்ளையாரது கும்பாபிஷேக மலரில் இருந்து தேர்ந்து எடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கருணாகரப் பிள்ளையாரின் திருவூஞ்சல் மற்றும் கவிதைகள், தேர், தேர்த்திருவிழாப்பற்றிய வரவு, செலவு, அறிக்கை என்பன சேர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆவணப்படுத்தல் வரலாற்று நிகழ்வாகும். இம்மலர் கருணாகரன் மெய்யடியார்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமையும் என்பதில் ஐயமில்லை.

"கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்"

இங்ஙனம்
திருப்பணிச்சபையினர்
கருணாகரப்பிள்ளையார் கோயில்
உரும்பிராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தேருக்கான பூதப்பார் வைத்தல்



புதிய தேருக்கான பவளக்கால் வைத்தல்



சித்திரத்தேர் வேலைப்பாடுகள் நடைபெறும் காட்சி...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோயில் தேவஸ்தான முதல்வர் சிவாச்சார்யமணி சிவஸ்ரீ வைத்தீஸ்வர சபாரத்தினக் குருக்கள் அவர்களின் ஆசியுரை



சைவசமயத்தின் கோட்பாட்டின்படி ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளை கடவுள் என்று போற்றுகிறோம். இப்போற்றுதலில் முதற் போற்றுதற்குரியவர் விநாயகப்பெருமான். யார் எந்தக் கருமத்தைச் செய்யப்புகுமின் முதல் வழிபாட்டிற்கும் பூஜைக்கும் உரிய விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்வது நமது சமய மரபாகும். அந்த வகையில் எமது முற்சந்ததியினராக ஸ்ரீ கருணாகர ஐயர் (குருக்கள்) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயமே உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலாகும். ஆலய ஆதீன அந்தணர் பரம்பரையினரும் திருப்பணிச் சபையினரும் அடியார்களும் சேர்ந்து திருப்பணிகள் உபயங்களை நடாத்தி இன்று ஆலயம் சிறப்பாக விளங்குகின்றது. இராஜகோபுரம், மணிமண்டபம் ஆகியவற்றுடன் இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கும் நமது ஆலயத்திற்கு ஓர்புதிய சித்திரத்தேர் செய்ய வேண்டும் என்று விரும்பி அதற்கு முதல் நிதியையும் வழங்கி ஆரம்பித்தவர் அமரர் திரு. மார்க்கண்டு செல்லத்துரை (மலேசியா) அவர்கள். அவரது குடும்பத்தினர் மூலமாகக் கொண்டமைக்கப்பட்ட நிதியை ஆரம்பமாகக் கொண்டு திருப்பணிச் சபையினரின் பெரும் முயற்சியினாலும் மற்றும் உள் ஊர்களிலும் வெளியூர்களிலும் உள்ள கருணாகரப் பெருமானுடைய அடியார்களுடைய நிதியுதவிகளி னாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்பது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்பணிக்காக அல்லும் பகலும் அயராது பணியாற்றிய திருப்பணிச்சபையாரின் நன்முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. நமது ஆலயத்திற்கு அழகு மிகு சித்திரத்தேரினை தமது கலைத்திறமையினால் உருவாக்கிக் கொடுத்த சிற்பகலாமணி திரு. சி. அமரசிங்கம் ஆச்சாரியார் அவர்களையும் பாராட்டுவதுடன் அவர்களது கலைப்பணி மென்மேலும் ஓங்கி உயர்ந்து வளர்ந்து பெருக வேண்டும் என்றும் ஆசீர்வதிக்கிறேன். இன்று நடைபெறும் வெள்ளோட்ட விழாவினைத் தொடர்ந்து 22.09.2010 புதன்கிழமை கருணாகரப் பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனி வந்து அடியார்களுக்கு திருவருட்காட்சி கொடுத்தருளுவார். இன்று நடைபெறும் வெள்ளோட்ட விழா இனிது நிறைவெய்தவும் இவ்விழாவினையொட்டி வெளி வரும்" வெள்ளோட்டவிழா மலர்" என்றும் நறுமணம் வீசும் நன்மலராக மணம் வீசவும், கருணாகரப்பெருமானுடைய திருவருட் காட்சி மூலம் அடியார்கள் சகல நலன்களும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் எனவும் கருணாகரப் பெருமான் பாதம் பணிந்து ஆசீர்வதிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணி பதம் நாடு



எமது குலதெய்வமாகிய உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோயில் சித்திர தேர் வெள்ளோட்டவிழாவும் ரதப்பிரதிஷ்டையும் 20.09.2010 திங்கட்கிழமை நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி.

சகல காரிய சித்திகளுக்கும் எல்லோராலும் எப்பொழுதும் போற்றப்படுபவர் விநாயகப் பெருமான். தம்மை மெய்யன்போடு வழிபடும் அடியார்களது துயர்களைந்து விக்கினங்கள் நீக்கி கனவிலும் துணை புரிபவர் சரவணத்துதித்த ஷண்முக விசாகப் பெருமானது சகோதரரான கருணாகர விக்கினேஸ்வரப்பெருமான். அருள்மிகு கருணாகரப்பெருமானுக்கு திருப்பணிச்சபையினரின் பெரும் முயற்சியினாலும் அடியார்களுடைய மனமுவந்த நிதியுதவிகளினாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேரினை அழகாக உருவாக்கிய சிற்பகலாமணி திரு. சி. அமரசிங்கம் ஆச்சாரியர் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

கருணாகரப்பெருமான் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து அடியார்கள் குறைதீர்த்து கருணை எனும் வெள்ளை மதம் பொழிகின்ற கருணை மழை பொழிந்தருளவும், புதிய சித்திரத்தேர்ப் பணிகளில் ஈடுபட்ட திருப்பணிச்சபையினர் நிதியுதவிய அன்பர்கள் மற்றும் சகல அடியார்கள் எல்லோருக்கும் எல்லாம் வல்ல சர்வவிக்னநிவாரக ஓங்காரரூப கருணாகரப் பெருமானுடைய திருவருள் என்றென்றும் நிறைவாகக் கிடைத்து குறைவின்றி வாழ அருள் புரிய வேண்டும் என்றும் வெள்ளோட்ட விழா இனிது சிறந்து நடைபெறவும், வெள்ளோட்ட விழா மலர் கருணாகரப்பெருமான் புகழ் மணம் வீசும் சுகந்த மலராகத் திகழவும் கருணா மூர்த்தியாகிய கருணாகரப் பெருமானது திருவடித்தாமரைகளைப்பூஜித்துப் போற்றி எமது நல்லாசிகளை நல்குவோமாக!

சுபமஸ்து

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்
மஹோற்சவ சிவாச்சார்யார்
சிவாகம கிரியாபூஷணம் சிவாகமகிரியா தத்துவநிதி
பிரதிஷ்டா கிரியாசிரோமணி ஸ்கந்தராதனஸம்கிரஹர்
ஈசாரு சிவாச்சார்யார்
**சிவஸ்ரீ. சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka



ஈழத்திருநாட்டிலுள்ள பழம்பெரும் விநாயகர் ஆலயங்களில் கருணாகரப் பிள்ளையார் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இத்திருக்கோயில் சிறப்புப்பற்றி வரலாற்றுத்துறை சார்ந்த அறிஞர்கள் பலர் கருத்துக் கூறியுள்ளார்கள். உரும்பிராய் இணுவில் வாழ் மக்களின் குலதெய்வமாக விளங்கும் திருவருட் சிறப்புமிக்க இத்தலத்தில் சைவாகம நெறிமுறை தவறாத பூசை வழிபாடும் சமகாலச் சொற்பொழிவுக்கு முதன்மை கொடுக்கின்ற பாரம்பரியமும் அன்று முதல் இன்று வரை பேணப்பட்டு வருகிறது. சிவாச்சாரிய குருக்கள் பரம்பரையின் நிர்வகித்தல் பலநூறு வருடமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இவ்வாலய வளர்ச்சியில் காலத்துக்குக்கு காலம் பொது மக்களின் திருப்பணிப் பங்களிப்பு நிறைவாக நிறைவேறி வருவது சிறப்புக்குரியது. ஆசிரியமணி. அ. பஞ்சாட்சரம் ஐயா போன்ற பெருமக்கள் இவ்வாலய வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்து இன்றைய வளர்ச்சிக்கு எமக்கு துணை செய்த பெருமக்கள். இவ்வாலயம் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இத்திருக்கோயிலில் புதிய தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். இத்திருத்தேரை உருவாக்க அயராது பாடுபட்ட திருப்பணித் தொண்டர்களை வாழ்த்துகிறேன். வணங்குகிறேன். கருணாகரப்பிள்ளையாரின் பழைய கட்டுத்தேர் மனத்தில் இன்றும் நிறைந்திருக்கிறது. கமுகு, வாழை, நுங்கு, இளநீர், தாளங்காய் தொங்க மாலைப் பொழுதில் செம்மண் வீதியில் நாதஸ்வர தவில்ச்சமாவுக்கு மத்தியில் தேர் ஊர்ந்து வந்த நாட்கள் மறக்க முடியாதவை. காலத்தின் மாற்றம் இன்று உறுதியான சிற்பம் நிறைந்த அழகுத்தேர் உருவாக்கப்பட்டமை, எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையாரின் பேரருள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

**திருவாளர் ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**



விநாயகர் அடியார்களுக்கு,

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் புதிதாக அமைக்கப்பட்ட திருத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பழைமையும், பெருமையும் வாய்ந்த இவ்ஆலயம் உரும்பிராய் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதாகவும், வேண்டுவார் வேண்டுவதை இவ்வாலயத்தில் ஈயும் பொருட்டு இவ்வாலயத்தில் எல்லாவற்றுக்கும் காரண காரியராக விளங்கும் விநாயகப் பெருமான் கருணாகர விநாயகராக எழுந்தருளி உள்ளார். ஆலய விழாக்கள் இறைவனுடைய செயற்பாட்டை நமக்கு உணர்த்துகின்றன. இவ்வகையில் தேர்த்திருவிழா பலசிறப்புக்களை நமக்கு எடுத்து இயம்புகின்றது. இதனை அனனவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் சிறப்பக்கலைஞர் திரு.சி.அமரசிங்கம் அவர்களினால் சித்திர வேலைப்பாடுடன் கூடிய தேர் இன்று உருவாக்கப்பட்டிருப்பது இவ் ஆலயத்துக்கும் இவ்வூருக்கும் பெருமையைத் தருவதாகும்.இப்புண்ணிய காரியத்தைச் செய்த திருப்பணிச் சபையினரையும் ஊர் மக்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.அனைத்தும் சிறப்பாக நடைபெற்று எல்லோருக்கும் விநாயகருடைய அன்பு கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

“வாழ்க கலை! வளர்க நம் சமயப்பணிகள் .”

என்றும் வேண்டும் இன்ப அன்பு
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரம்மாச்சாரிய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம



எமக்கெல்லாம் பெருவாழ்வு அளித்த அராலி வடக்கு இலங்கைத் தாழ்வு முருகன் இற்றைக்கு 34 வருடங்களுக்கு முன்பு எம்மை சிறபக்கலையில் காலூன்றச்செய்து அருள் வழிகாட்டினார் உரும்பிராய் நகரில் எம்மை தேர்த்திருப்பணியில் அறிமுகப்படுத்திய பர்வதபத்தினி அம்பாளும் கருணை கூர்ந்தார். பின்பு கருணாகரப் பிள்ளையாரின் துணையினால் தேர்த்திருப்பணி செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. இதற்கு அமரத்துவம் அடைந்த ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவர்களும், அவருக்கு உறுதுணையாக இருந்த திரு. சண்முகநாதன் அவர்களும் என்னிடம் பலமுறை வந்து இப்பணியை ஏற்குமாறு கேட்டதற்கிணங்க இப்பணியை ஏற்றுக் கொண்டு செயற்பட்ட வேளையில் பெரும்பான்மை யான வேலைகள் நிறைவடைந்த நிலையில் ஆசிரியமணியின் எதிர்பாராத மறைவின் பின்னர் சிறிது காலம் திருப்பணிகள் நடைபெறவில்லை. மேற்படித் திருப்பணியை தொடர்வதற்காக அவரது வழித்தோன்றலும் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபருமாகிய திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்களும், எமது கிராமத்தில் சில ஆண்டுகள் கிராம உத்தியோகத்தராக இருந்த திரு. கனகநாயகம் அவர்களும் என்னுடன் தொடர்பு கொண்டு திருப்பணியைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ததன் பொருட்டு என்னாலான அளவில் என்னுடைய குழுவினரின் ஆதரவுடனும் சிறப்புடனும் நிறைவு பெற்றுள்ள இச்சித்திரத்தேர் வெள்ளோட்டம் காணுகின்ற 20.09.2010 ஆகிய இன்றைய திருநாளில் இத்திருப்பணியில் பங்குபற்றியோர்க்கும், உரும்பிராய் வாழ்மக்களுக்கும், எனது குழுவினருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பிள்ளையாரின் அருள் கிடைத்து சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

**ஸ்தபதி விஸ்வப்பிரம ஸ்ரீ சி. அமரசிங்கம் ஆச்சாரியார்**

அராலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் ஆசிச் செய்தி



உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்குகின்றது. ஓங்கார மூர்த்தி ஆகிய பிள்ளையாரின் திருவடிகளை மனதிலே நினைத்தால் தொல்லை, துன்பம், துயரம் முதலானவை நீங்கப் பெற்று நல்வாழ்வைப் பெறமுடியும். கருணாகரப் பிள்ளையாரை வழிபடுகிறவர்கள். வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று நற்கதி அடைவார்கள். இதனாலேயே "கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்." என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

இத்துணை பெருமை வாய்ந்த இவ் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவத்தின் போது கருணாகரப்பெருமான் கட்டுத் தேரில் வாழை, கமுகு, நுங்கு, கரும்பு, இளநீர் தொங்க மாலைப் பொழுதினில் பிரபல நாதஸ்வர, தவில் சமாவின் மத்தியில் திருவீதி வருவது தனியழகே. காலத்தின் மாறுதலுக்கேற்ப 2005 இல் கருணாகரப் பெருமானிற்கு ஒரு புதிய சித்திரத் தேரை உருவாக்க திருப்பணிச்சபையின் அன்றைய செயலாளர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களால் அராலியூர் ஸ்தபதி சி.அமரசிங்கம் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தேர் வேலையை ஆரம்பிக்க மலேசியா வாழ் மார்க்கண்டு செல்லத்துரை அவர்கள் தமது குடும்பத்தின் சார்பாக ஆரம்பநிதியை வழங்கியிருந்தார். இவ் வேலைகள் தொடர்ந்து இரவுபகல் பாராது நடைபெற்று வந்ததுடன் உள்ளூர் சிற்ப வல்லுனர்களும், தென்னிந்திய சிற்பக் கலைஞர்களும் பங்கு கொண்டு சிற்பங்களை அமைத்துள்ளனர். தற்போது இச்சிற்பங்கள் தேரினில் சித்திரம் பேசுகின்றன.

கருணாகரப் பெருமானின் திருவருளால் இன்று புதிய சித்திரத் தேர் சிறப்புற அமைந்துள்ளது. இப்பணியை நிறைவேற்ற ஒத்துழைத்த ஸ்தபதி சி. அமரசிங்கத்திற்கும் அவரது குழுவினருக்கும், வர்ண வேலைகளை அழகுறத் தீட்டிய குழுவினர்க்கும் இப்பணியில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினருக்கும், வெள்ளோட்டமலர் வெளியீட்டிற்கு உதவியவர்கள், நிதி உதவிய கருணாகரன் அடியார்கள் யாவருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்."

அ. ஈஸ்வரநாதன்
செயலாளர், கருணாகரப் பிள்ளையார் கோயில்
திருப்பணிச்சபை, உரும்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தமண்டபத்தில் பிள்ளையார்



பழைய கட்டுத்தேரின் தோற்றம்



புதிய சித்திரத்தேர் அமைப்பின் போது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரத் தேரில் பவனி வாரீர்!

**திரு. கனகசபை உருத்திரகுமார்** (M.A)
அகில இலங்கைச் சமாதான நீதிவான்

ஏர் பூத்த இலங்கு எழில் உரும்பிராயின்
எழிலார்ந்த கருணாகரப் பிள்ளையாரே!
பார் ஓங்கப் பல வெழிலும் தந்தருள்வாய்
பார்வதியின் புத்திரனே பணிந்தோம் நின்னை
காரோடும் கருமேகப் பொழிவே உந்தன்
கருணை அருள் வெள்ளம் கருணாகரனே
ஊர் கூடி உவகை கொண்டு உந்தன்
சித்திரத் தேரோடும் சிறப்போடுசெல்வா வாரீர்

வரலாற்றுப் பொக்கிசமாய்ப் பொலிந்து
வளமமைத்து வாழ்வெல்லம் உய்ய
கரமேந்தும் கருணாகரப் பிள்ளையாரே
கடவுளர்க்கு மேலான கற்பகமே!
மரமேந்து பூதப்பார் வடிவின் மேலாய்
மாண்புடனமைந்த சித்திரத்தேரில்
அரனாரோடு அம்பிகையும் அருளவாரீர்!
சிம்மாசனத்தமர் திருந்து அருளைத்தாரீர்.

செல்வ வளம் செல்லும் வளம் சேர்த்திருந்து
செப்பரிய வித்தை நிதம் சேர்த்தே தந்து
கல்வி எனும் கற்பகத்தின் காவலனே!
கருணாகரப் பிள்ளையாரே! கணபதியே!
பல் கலையும் பாரில் மிகப் பணித்தருளும்
பண்பாளர் உவந்தேத்தும் கஜமுகனே
வல்லபை கணபதியே வாழ்வின் வித்தே
வளமார்ந்த சித்திரத்தேரேறி வாரீர்! வாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாட்சரத்தில் பதிந்த ஈஸ்வரன் பக்குவத்தை

பார் உயர்த்த வந்த கருணாகரா!

விஞ்சு புகழ் சித்திரத் தேர் அமைத்தார் அன்பர்

விண்மேவு அருள் பரப்ப மிக்கோர் செய்தார்.

மஞ்சு படி வானம் பொழி மழைப் பக்குவமே

மாண்பான வனப்பே மேவும் பதி.

கெஞ்சு மடியார் வினைகளையும் விக்னேஸ்வரா

கேட்ட வரமருளச் சித்திரத் தேரில் வாரீர்! வாரீர்!

மூன்று கோவில் முற்றத்து முதல்வனே

மூசிக வாகனனே மோதகப் பிரியாய்.

சான்று தரும் தத்து வத்தின் தனிப்பொருளே

பர்வதவர்த்தினி உவந் தேத்து பாலவிநாயகா!

குன்றுருவ வேல் வாங்கி நின்ற கந்தன்

குறமகளைப் புணர வருள் புரிந்த கோவே

நன்று தரு கருணாகரப்பிள்ளையாரே, நாளும்

நாத வொலிச் சித்திரத் தேரேறி வாரீர்! வாரீர்!

செந் தமிழர்தம் மண்ணில் தெய்வீகம் ஓங்கி

தெரு வெல்லாம் அருள் வாழ்வு கிளர்ந்தொளிர வாரீர்.

நெஞ்சு நிறை அன்பினோடு நின் அடியை ஏத்தி

நெக்குருகி இன்றுசித்திரத் தேர் நிறுத்தியோர் வாழி!

பஞ்ச மொடு பசிப் பிணிகள் பாரில் இன்றி

பண்புடனே வாழும் அன்பர் பற்று வாழி!

விஞ்சு புகழ் கருணாகரப் பிள்ளையாரின்

விருப்பினை நிறைவு செய் அன்பர் அன்பு வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழி

சித்தாந்தப் பேராசிரியர் மகாவித்துவான்
**ச. தண்டபாணி தேசிகர்**

**மாற்ற முடியாத – மறக்க முடியாத பழக்கம்:–**

சில பழக்கங்கள் நம்மையறியாமலே நம்முடையவாழ்வில் கலந்திருக்கின்றன. அப் பழக்கங்கள் எங்ஙனம் உண்டாயின? எப்படி நம்மிடைக் கலந்தன என்று எண்ணிப் பார்க்காமையால் சிற்சில சமயங்களில் நாம் அப்பழக்கங்களை விட்டுவிடலாமா? என்று கூட எண்ணுகிறோம். துணிந்து விட்டுவிட்டாலோ, அன்று முழுவதும் ஏதோ செய்யக் கூடாத காரியத்தைச் செய்துவிட்டது போலவும் – அதனாற் பெருந் தீங்கு விளையப் போவதாகவும் கண்டு கவலைப்பட்டுக் கொண்டேயிருப்போம். அத்த கைய பழக்கங்களில் பிள்ளையார் சுழி போடு தலும், எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையார் குட்டிக் கொள்ளுதலும் ஆம்.

**பிள்ளையார் சுழி**

பிறந்தது எப்படி? என்பதிற் பலரும் பலவகையான காரணங்களைக் கூறுகின்றனர். அவற்றுட் சில ஆகம சாத்திர உண்மைகள். சில ஊகமான யுக்தி வாதங்கள். அவை எப்படியிருந்தாலும் தொகுத்துணிர்வது நல்லது தானே!

1. நம்முடைய தமிழ் எழுத்தும், கிரந்த எழுத்தும் வட்டவடிவானவை. வட்டம் இயற்கையான வடிவம். குழந்தைகள் கையிலே எழுதுங் குச்சியைக் கொடுத்தால் வட்ட வட்டமாகவே எழுதுகின்றன. அது அவைகளின் இயல்பு. எழுதுகின்றவர்கள், எழுதுகோல் சிக்கின்றி நேர்மையாக எழுதுமா என்பதை ஆராய முதற்கண் சுழித்தனர். அது பிள்ளையார் சுழியாயிற்று என்பது ஒன்று.

2. ஓம் என்பது முதல் ஒலி, இதனின்றே எல்லா ஒலியுலகும் பிறந்தன. அது அ + உ + ம் என்ற மூன்றெழுத்தின் கூட்டு. ஒலியுலக மூலமாகிய இதனை எழுதியே ஏனையவற்றை எழுதுவது நன்றி மறவாத தமிழர் பண்பு. ஓம் என்பதை விரைந்து எழுதும் போது "உ" என்பது போல எழுதினர். இதுதான் பிள்ளையார் சுழி என்பர் சிலர்.

3. ஓம் என்ற வடிவம் பிள்ளையார் வடிவம். இப்பிரணவம் திரிந்த வடிவம் பிள்ளையார் சுழி என்பர் சிலர்.

4. ஓங்காரம் – பரம்பொருள். இதற்குச் சிந்திப்ப வரை உயர்த்துவது என்பது பகுதிப்பொருள். உபதேசம் பெற்ற பரிபாக ஆன்மா இதனை உச்சரித்த அளவில் மூன்றுடல்களையும் நீத்து, பிரகிருதி மண்டலத்திற்கு மேலே உயர்கிறான் என்பது இதன் விளக்கம். இதனை அதர்வசி கோபநிஷத் –
ஸக்ருது³ச்சரித மாத்ர ஊர்த்⁴வம் உந்நாயயதீத்யோங்கார:। என்றும்
ஸர்வஸ்மாத் ப்ராணாந் ப்ரணாமயதி ஸர்வாந் ப்ரணவ: ஸ்தம்... ஊர்த்⁴வம் உந்நாயதி॥ என்றும்
கூறுகிறது. பிரணவத்தை உபாசனை செய்தவன் சாவா மூவாப் பேரின்பத்தை எய்துகின்றான் என்று முண்டகோப நிடதம் மொழிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முண்டகோபநிஷதம் எனப் ப்ரணவொ தநு: பிரணவம் வில்வடிவானது என்றது. சர்ப்பவடிவான குண்டலி நீ இது: இது தான் மூல நாடி அன்னத்தின் குரல் போன்ற ஒலியுடையது என்ற கருத்தமைய,

நாடிஉமூலா ப்ரத்ராஜூஹி குண்டலிநீ ஹம்ஸநிஸ்வநா: என்று கூறுகிறது ஞான சித்தியாகமம்.

பிரணவம் ஐந்தெழுத்துக்களின் கூட்டம். முதல் எழுத்துரு நட்சத்திரப் புள்ளி. அதாவது வட்டப் புள்ளி (●). இரண்டாம் வடிவு தண்டம் போலப் படுக்கையிற் கோடு "–" இது போன்றது. மூன்றாம் உரு வட்டம் (○), நான்காம் உரு பிறைமதி ◡. ஐந்தாம் உரு பிந்து, அதாவது • புள்ளி, இவற்றுள் வட்டமும் நேர்கோடும் இணைந்து பிள்ளையார் சுழியாகிறது. இச்சுழியை எழுதினாற் போதும், பிள்ளையார் வணக்கம் ஆகிவிடுகிறது. இப்பிரணவத்தில் உள்ள அகரம் சிவம். உகரம் சக்தி. இவையிரண்டும் சேர்ந்த உ – இது பிள்ளையார் சுழியாகிறது. இவ்வுண்மைகளை,

ப்ரதமம் தாரகாகாரம் த்விதீயம் தண்டவத்பவேத்।
த்ருதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் ஹ்ருத்தசந்த்ரகம்।
பஞ்சமம் பிந்துஸம்யுக்தம் ப்ரணவம் பஞ்சலக்ஷணம்॥

என்று காமிகாகமும்,

"இறை சத்தி பாசம் எழில்மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத்துள்"

எனத் திருவருட்பயனும்,

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
"அகரம் உயிரே உகரம் பரமே
மகரம் மலமாய் வரும்பு பதத்தில்"

எனத் திருமந்திரமும் கூறுகின்றன.

ஆகவே, பிள்ளையார் சுழி பிரணவத்தின் சிதைந்த வடிவு என்பதும், இதனை முதன் முதல் எழுதுவதன் வாயிலாக உயிர்கள் தற்போதங் கெட்டுச் சிவஞானமே வரப்பெற்று, செய்யுஞ் செயலனைத்தும் சிவச் செயலாக விளங்கும் தன்மையைப் பெறுகின்றன என்பதும் உணரக்கிடக்கின்றன.

சிவனரு வுருவுமல்லன் சித்தினோ டசித்து மல்லன்
பவ முதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
தவமுக லியோக போகந் தரிப்பவ னல்லன் றானே
இவை பெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பினானே.

–சித்தியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தேர் அமைப்பும் தேர்த்திருவிழாவும்

**சைவப்புலவர். சி. நந்தகுமார்**

"சிவபூமி" எனப் போற்றப்படும் ஈழ வள நாட்டில் சைவசமய கலாசாரம் மிக்க யாழ்ப் பாணத்தில் வளமிகு உரும்பிராயில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயத்தில் கருணாகர மூர்த்தியாம் விநாயகப்பெருமான் வீற்றிருந்து அருள் புரிகிறார். கருணாகரப்பிள்ளையாருக்கு அழகிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு, தேர் வெள்ளோட்டம் நடைபெறும் இந்நன்நாளில் தேர், அதன் அமைப்பு, தேர்த்திருவிழா என்பன பற்றி ஆராய்வது சாலப்பொருத்தமானதாகும்.

"தேர்" என்ற சொல் "தேர்ந்தெடுத்தது" என்றும் தேரைக் குறிக்கும் "ரத" என்னும் பதம் "அசைவது" எனவும் பொருள்படும். தேரைத் "தெய்வமயம்", "வேள்விமயம்", எனப்பெருமைப் படுத்திக் கூறுவதால் தேர் பிரபஞ்சத்தின் குறியீடாக விளங்குகிறது. பிரபஞ்ச சிருஷ்டி அனைத்தும் தேரில் அடங்கிக் காட்சி அளிக்கும். "இப்பிரபஞ்ச இயல்பைத் தேர்ந்து கொள்" என்ற சிறந்த அறிவுறுத்தலைக்காட்டி நிற்பது தேர்.

சூரிய சந்திரர்கள் - சில்லாகவும், வேதங் கள் குதிரைகளாகவும், பூமி தேராகவும் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கி னியை அம்பின் கூராகவும் கொண்டு, சிவ பெருமான் திரிபுரசுந்தரர்களைத் தமது திருப்புன் முறுவலால் எரித்தருளினார். இதன் பாவனையாக அமைந்ததுதான் தேர்த்திருவிழா, திரிபுரசங் காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களையும், கெடுத்தற்காகத் தேர்த்திருவிழா நடை பெறுகிறது.

தேரைப்பற்றிய செய்திகள் மிகப்பழைய வேதமாகிய இருக்கு வேதத்தில் காணப்படுகிறது. கடோப உபநிடதத்தில் மனிதனுடைய உடலைத் தேராகவும், உயிரைத் தலைவனாகவும், புலன் களைப் பறிகளாகவும், புலன்கள், மற்றும் விஷய ஞானத்தை தேரோடும் வீதிகளாகவும் வர்ணிக்கும் உருவக அமைப்பு காணப்படுகிறது.

அரசரும், சமூகத்தின் உயர்வர்க்கத்தி னரும் பயன்படுத்தி வந்த தேர் காலப்போக்கில் உலகனைத்தும் ஆக்கி அருள் ஆட்சிபுரியும் இறைவன், இறைவி எழுந்தருளும் ஊர்தியாக விளங்கத் தொடங்கியது.

நமது புராதன கலைச்செல்வங்களின் மகிமைக்கு சான்றாகவும், நடமாடும் மரச்சிற்பமா கவும், அசையும் கோயிலாகவும் தேர் அமைகிறது. மூலஸ்தானத்தில் இறைவன் விளங்குவது போல தேர்த்தட்டிலும் அவர் விளங்குகிறார். "சில்லுகள்" மூலம் அசையும் கோயில் போல தேர் விளங்கு கிறது" என ஓர் அறிஞர் குறிப்பிடுகிறார். கோயி லின் அமைப்பு போல சதுரம், அறுகோணம், எண்கோணம், வட்டம் என்ற அமைப்பில் தேரும் அமைக்கப்படுவதால் தேரை "நடமாடுங்கோயில்" என்று சிறப்பித்துக் கூறுவர்."

"மானசாரம்" எனும் சிற்ப நூல் தேரின் இலக்கணங்கள் பற்றிக்குறிப்பிடுகிறது. "விட்டுணு தத்துவசம்கிதை" எனும் ஆகமத்தில் இரத நிர்மாணப் படலம்" எனும் பகுதி தேரின் அமைப்பு விதிமுறைகளை விரிவாக விளக்கிக் கூறுகிறது. அதன் தொடக்கமே "தேர் இந்துத் தெய்வங்களின் உறைவிடம்" எனக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிற்பீலிகைகளினாலும், சாமரங்களி னாலும், தோரணங்களினாலும், நல்லோசை தரும் சிறிய மணிகளினாலும் ஒளி பொருந்திய கண்ணாடிகளினாலும், விசிறிகளினாலும் மாலைகளாலும் தேரின் மேற்பகுதி அலங்கரிக்கப் பட்டு இருக்கும். தேரின் மேற்பகுதி கோபுரமாக குவிந்து செல்லும். தேர்கலச முடிவில் வெள்ளிக் குடை தெரிகிறது. எங்கள் மனம் ஒருமைப்பட்டு, ஒருமித்த சிந்தனையுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழலில் துன்ப வெய்யில் நம்மைத்தாக்காது காக்கும்.

தேரின் பீடம் இருதயத்தைக் குறிக்கும். இறைவன் தேரின் பீடத்தில் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. எமது வாழ்க்கைத்தேர் சிறப்பாக ஓடுவதற்கு எங்கள் இருதய பீடத்தில் இறைவனை எழுந்தருளச் செய்யவேண்டும்.

தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங் களின் பெருமையுணர்த்தும் உருவங்கள் செதுக் கப்பட்டிருக்கும் . கீழே அஸ்டானத்தில் சிங்கங்கள், யாழிகள், மகரங்கள் நுண்ணிய மடிப்பு வேலைப் பாடுகள், நடனமாடுவோர், பூதங்கள், ஆலயத்தின் புராதன வரலாறுகள், இதிகாச, புராண, தலபுராண செய்திகள் இங்கு சித்தரிக்கப்படுகின்றன.

மகோன்னதமான உற்சவம் என்று சொல் லப்படுகின்ற மகோற்சவத்தின் சிகரமாக அமை வது தேர்த்திருவிழா ஆகும். சைவசமயத்தின் எழுச்சிவிழா. சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் பெருவிழா.

அற்புத கீர்த்தி வேண்டின், ஆனந்த வாழ்வு வேண்டின், நற்பொருள் குவிதல் வேண்டின், நலமெலாம் விளைய வேண்டின், எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையார் திருத்தேர் வடம் பிடித்து இழுத்து இவை யாவும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

## அருட் கருணாகரன்

பிரணவப் பொருளாய் முன்வந்துதித்து முதல்வன். பிணியினைத் தீர்த்து எமையாளும் ஐயன், உரும்பை நகரில் விரும்பியுறை அருட் கருணாகரன். கருணை மழை பொழியும் கற்பகம். பூர்வ ஜென்மத்திற்கு செய்த பயனால் கருணாகரனைக் குல தெய்வமாய்ப் பெற்றோம்.

நினைத்துருகும் அடியாரை நைய வைப்பான்
நில்லாமே என் தீவினைகள் நீங்க வைப்பான்.

எல்லாம் வல்லவராய் எம்மை நடத்திக் கொண்டிருக்கிறார் கருணாகரப் பெருமான். அவரருளாலே அவரை வழிபட்டு உய்வோமாக.

- குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாகரனின் புதிய சித்திரத்தேர்

**அ. ஈஸ்வரநாதன்**
அதிபர், யா/ இந்துக் கல்லூரி, உரும்பிராய்.

*திருச்சிற்றம்பலம்*
**ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.**
*திருச்சிற்றம்பலம்*

சகல செல்வங்களும் நிறையப் பெற்ற ஈழமணித் திருநாட்டின் வடபால் நாவலர் வாழ்ந்த நம்நகர் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் வலி-கிழக்குப்பிரதேசத்தில் நல்ல நீர்வளம், நிலவளம் பொருந்தியும், சகல கலைகளும் செழித்தோங்கி வளர்ந்து சைவமும் தமிழும் இரு கண்களாகப் போற்றப்படுவதும் அறம் வளர்க்கும் சான்றோர்கள், அந்தணப் பெருமக்கள், கவிஞர்கள், தருமவான்கள் என நல்லோர்கள் வாழ்வதுமாகிய உரும்பிராய்ப்பதியில் பரத்தைப்புலத்தில் கருணாகரப்பிள்ளையார் கோயில் கொண்டு எழுந்தருளி தம்மை வழிபடும் அடியார்க்கு அருள் பாலித்துக் கொண்டு வீற்றிருக்கும் அழகிய திருக்கோலக் காட்சி அடியார்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த கருணாகரப் பிள்ளையாருக்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கப் பட்டு வெள்ளோட்டம் நடைபெற்று, வெள்ளோட்ட விழாவில் சித்திரத் தேர் வெள்ளோட்டமலரும் வெளிவரவுள்ளமை கருணாகரப்பெருமானின் திருவருளே.

இறைவனுக்குச் செய்யும் உபசமங்கள் இருவகைப்படும். அவை தேலோபசாரம், இராஜோபசாரம் என்பதாகும். இறைவனை தெய்வமாகப் பார்ப்பது ஒன்று மற்றையது அவனை இராஜானாகக் கண்டு அரசன் உலா வரும் தேரில் எழுந்தருளச் செய்து விழா எடுப்பது.

திருக்கோயில்களின் அமைப்பை ஒட்டியே தேரின் வடிவம் திட்டமிடப்படுகின்றது.

தென் தமிழகத்திலும் இலங்கையிலும் இரண்டு வகையான தேர்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. ஒன்று உருத்திராகாரம், மற்றையது கமலாகாரம். இதில் கருணாகரப் பெருமானுக்கு உருவாக்கப்பட்ட அழகிய சித்திரத்தேர் கமலாகார வகையைச் சேர்ந்தது. இத் தேர் மூன்று பாகங்களைக் கொண்டது. ஒன்று பிரமபாகம். இது கீழ்ப் பகுதியைக் குறிக்கும். கருணாகரப்பிள்ளையாரின் சித்திரத்தேரின் பிரமபாகம் மருதமரம், இலுப்பை மரம், என்பவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இருபது நட்டுக்கண் சிற்பம், இருபது பூதப்பார் சிற்பம், படைச்சிற்பங்களாகிய யானைப் படை, சிம்மப்படை, குதிரைப்படை என்பவற்றுடன் சிறுயாழிகள், மகரயாழிகள், இருபத்தியெட்டு சிற்பங்களும், கமல வடிவமாகிய கீழ் பண்டிகை என்னும் பகுதியில் பதினாறு குதிரைகளும், எட்டு யாழிகளும், எட்டு நாசிந்தலை கொடி என்பவையும் நூற்று ஐம்பத்தாறு போதிகைகளும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்து விஷ்ணுபாகம் எனப்படும் தேரின் நடுப்பகுதி முதிரை, பூவாகை, பலா போன்ற மரங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. பவளக்கால் எட்டு, பெருயாழி எட்டு, அழகிய வர்ண வடிவமைப்பு விஷ்ணு பாகத்தை அலங்கரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து உருத்திரபாகம் மஞ்ச உனா, பலா போன்ற மரங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. வீட்டு யன்னல்களில் காணும் லூவாய் போன்ற வேலைப்பாட்டுடனும் உலோக வேலைகளாக பிரதான கலசமும், முப்பத்தியிரண்டு கோஸ்ரக் கலசங்களும், 108 மணிகளும் சிறப்பாக அமைக் கப்பட்டுள்ளள. இம் மூன்று பகுதியையும் இரும்பி லான அச்சு சுமந்து உருள உதவுகின்றது. தேரில் முற்பகுதியில் பிரமா, குதிரை என்பன பலாமரத் தில் செதுக்கி அழகான வர்ணம் பூசப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புக்களுக்கு நிலைக்கள மான சித்திரத் தேரில் கருணாகரப் பெருமான் தேர் ஏறி வந்து திருவருள் பாலிக்க இருக்கின்றார். அடியார்கள் அனைவரும் கருணாகரனின் தேரின் வடம் தொட்டிழுத்து முத்தி உலகில் இடம் பெறு வதற்கு "சேரவாரும் செத்தீரே என்று அழைக்கின் றோம். கருணைக் கடலாம் கருணாகரனின் திருத் தேர் ஊர்ந்து வர நாம் செய்த பாவங்கள் ஓடும், பழவினைகள் ஓடும் இவை மட்டுமா.............

"பாரோடு பதினாறு லோகத்தில் உள்ள வெம்
பழியோடு பாவம் ஓடப்
பஞ்சம் ஓடக் கொடுமை யஞ்சி ஓடத்தமிழ்ப்
பாவலர்கள் வறுமை ஓடச்
சூர் ஓடஅவுணர்கள் பயந்தோட வானவர்கள்
துன்பங் கலங்கி யோடச்
சொல்லொடு பழகாத புலவ ரோடப்பழைய
தொண்டர் மன மாயை ஓட
வாரொடு கொங்கை மட வாரோடு மிளைஞர் தம்
மனையோடு மேவி வாழ
வந்து தெரி சிந்துளோர் பிணி ஓட அங்கவர்
மனத்துயர் அனைத்தும் ஓடத்
தேரோடி வரும் வீதி திகழ்பண்பை வாழவே
சிறுதேர் உருட்டியருளே!"

## கருணாகர கணேச அவதாரம்

வந்துமுன் னிருவர்தம் மலரடித் தலமிசைச்
சிந்தையார் வத்தொடுஞ் சென்னிதாழ்த் திடுதலுந்
தந்தையுந் தாயுமுன் றழுவிமார் புறவணைத்
தந்தமில் கருணைசெய் தருளினா ரவ்வழி.

என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன்
முன்னரே யுனதுதாண் முடியுறப் பணிவரே
லன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை
யுன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ

- கந்தபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சித்திரத் தேரின் வடம் பிடிக்க வாரீர்!

**சோ. பரமசாமி** (B.sc)
இணுவில்

யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் கட்டப் பெற்ற சைவ ஆலயங்களுள் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும் என எமது மூதாதையர் காலம் முதல் செவிவழிக் கதையாகக் கூறப்பெறுகிறது.

அவப்பேறாக இந்நாட்டுக்குள் வெளிநாட்ட வர்கள் காலடி வைத்த பின்னர் அவர்கள் தமது சமயத்தை இங்கு பரப்பும் நோக்குடன் இங்குள்ள ஆலயங்களையும் பண்பாடுகளையும் மாற்று வதில் முழுக் கவனமும் செலுத்தினர். அதனால் இடிபாடுகளும் சமய மாற்றங்களும் ஏற்பட லாயின. எனினும் மாற்றங்களை விரும்பாத மக்கள் தமது பழக்க வழக்கங்களை மறைமுக மாகச் செய்து வந்ததால், மர நிழலிலும் தனி யிடங்களிலும் தங்கள் வழிபாட்டைச் செய்து வந்தனர். அவ்வாறு செய்து வந்ததால் தப்பிப் பிழைத்தவையே இப்போதுள்ள பழைய ஆல யங்கள் எனலாம். அவ் வகையில்காப்பாற்றப்பட்ட ஆலயமாகக் கருதப்பெறுவது உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் என்பது வரலாறு.

உரும்பிராய் மேற்கிலே இணுவில் கிழக்கு எல்லையில் பரத்தைப் புலம் என்னும் குறிச்சியில் கோயில் கொண்டுள்ள கருணாகரப் பிள்ளையாரு க்கு அப்புக்குட்டி ஐயர் அவர்கள் ஒழுங்காகப் பூசை செய்து வந்தார். அவரைப் போலவே அவரது சிரேஷ்ட புத்திரரான வைத்தீஸ்வரக் குருக்கள் (சின்னையர்) அவர்கள் உள்ளிட்ட அவரது உறவினர்களும் ஒழுங்காகப் பூசை, வழிபாடுக ளைச் செய்து வந்தனர்.

கருணாகரப் பிள்ளையார் மீது பெரும் பக்தியுடையவரான வைத்தீஸ்வரக்குருக்கள் வடமொழியும், தென் மொழியும் நன்கு கற்றவர். இனிய குரல் வளம் பெற்ற குருக்கள் அவர்கள் கோயில் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டி னார். அவரது ஊக்கத்தை அவதானித்த ஊர வர்கள் அவர் மீது நன் மதிப்புக் காட்டி நடந்தனர். அதனைத் தொடர்ந்து மகோற்சவம் எனக் கூறப் படும் பெருந்திருவிழாவுக்கான ஆயத்தங்களைச் செய்தனர். மகோற்சவ விழாவிலே கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக்கள் ஆகம முறை தவறாது செய்பவையாகும். இவற்றிலே தேர்த் திருவிழா பற்றி ஓரிரு வார்த்தைகளைக் கூறுகின் றேன்.

பழந்தமிழர் காலத்தில் அரசர்களும் செல்வந்தர்களுமே தேர் வைத்திருந்து யானை, குதிரை பூட்டி நகர்வலம் வருவதற்கும் பகை அரசர்களுடன் போர் புரிவதற்கும் பயன்படுத்தினர்.

திருக் கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாக்களில் தேர்த் திருவிழாவே மிக முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. இத் திருவிழா, சிவபெருமான் திரிபுர தகனம் செய்தருளிய நிகழ்வைக் குறிப்பிடுவதாகக் கற்றறிந்தோர் குறிப்பிடுவர்.

ஆலயங்களில் இழுக்கப்படும் தேரின் ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு தத்துவங்களைக் குறிப்பதாகத் தேரை உருவாக்கும் சிற்பாசிரியர் கூறுவர். எனவே, தேர்த்திருவிழாவிலே கூடுகின்ற மக்கள் சனக் கூட்டத்தையும் அடியார்கள் பக்தி மேலிட்டுக் கூத்தாடுவதையும் தேரில் கொலுவிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் திருவுருவின் கோலத்தைப் பார்த்து மகிழ்வ துடன் நின்றுவிடாது தேரின் உறுப்புக்கள் ஒவ் வொன்றையும் அவற்றை உருவாக்கிய ஆசாரி யின் கற்பனைத் திறனையும் வியப்பதோடு அவற்றின் தத்துவங்களைத் தெரியாதவிடத்து, அவற்றைத் தெரிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும்.

பற்பல தத்துவ நுட்பங்களை உணர்த்தும் தேர்த் திருவிழாவை வெறும் கண்காட்சியாக நினைத்து மகிழாது, ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தேரின் வடம் பிடித்து இழுக்க வேண்டும். சுவாமி வீதி வலம் வரும் போது அடியார்கள் எல்லோரும் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்வதற்கு தேர்த்திருவிழா பெரிதும் உதவுகின் றது. இத்தகைய பெரு விழாவை இறை சிந்தனை யுடன் அடியார்கள் மனதிற் கொண்டு, கருணாகரப் பெருமானின் புதிய எண்கோணச் சித்திரத் தேரின் வடம் பிடிக்க அனைவரும் திரண்டு வாரீர்!

# தருமம்

உலக அன்னையாகிய ஔவை, "அறஞ்செய விரும்பு" என்று, அறத்திலே இந்த உலகத்துக்கு ஆசை உண்டானாலோ என்று அங்கலாய்க்கின்றாள்.

தர்மத்தை அறத்தினின்று சிறிதே வேறுபடுத்திச் சொல்லலாம். அறத்தில் தர்மம் அடங்கும்; தர்மத்தில் அறம் அடங்காது; அறம் என்ற நீண்டரேகையின் தொடக்கப் புள்ளியாயிருக்கும் தர்மம்; தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் நான்கையும் அடக்கியது அறம் என்று சொல்லலாம். "சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகல்" திருவள்ளுவரில் அறம் என்று சொல்லப்பட்டது. உண்மைச் சார்புகளை விசாரித்துணர்ந்து, பொய்ச் சார்புகள் கெடும்படி ஒழுக வேண்டும் என்பது கருத்து. கடவுளுக்கு ஆதியுமில்லை; அந்தமும் இல்லை; அறத்திற்கு அந்தம் சொல்வது கஷ்டம்; ஆதியுண்டு; அது தர்மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்
# திருவூஞ்சல்

### காப்பு
### ஆசிரிய விருத்தம்

